**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 347/2007**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **04.02.2026** |
| **பெயர்** | **அமரேந்திரராவ்** |
| **த/பெ** | **வசந்தராவ்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.42 p.m**

**குறுக்கு விசாரணை–**

1. நான் அமரேந்திராவ் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் வைத்துள்ளேனா என்றால் ஆதார் வைத்துள்ளேன். இவ்வழக்கின் வாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை குறித்து நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் என் தந்தை கூறி எனக்கு தெரியும். வழக்கு சொத்தில் முதலில் யாருக்கு சொந்தமானது என்றால் என் தந்தையுடைய பாட்டியான நரசம்மாளுக்கு சொந்தமானது. நரசம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நரசம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு பிள்ளைகள். நரசிம்மலு என்கிற நரசைய்யா மற்றும் நாராயணசாமி ஆவார்கள். மேற்சொன்ன இருவரும் நரசிம்மாளின் வாரிசுகள் என்பதை காண்பிக்க ஏதேனும் ஆதாரங்கள் ஏதுவும் இல்லையா என்றால் இல்லை. மேற்சொன்ன இருவரும் தற்போது உயிருடன் இல்லை. மேற்சொன்ன இருவருக்கும் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது அதனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நரசைய்யாவின் வாரிசு சுந்தரபாபு, நாராயணசாமி வாரிசு வசந்தராவ் மற்றும் ரமாகாந்தராவ். வசந்தராவ் என்னுடைய தந்தை. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வசந்தராவ் மற்றும் ரமாகாந்தராவ் அவர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். வசந்தராவுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஐந்து நபர்கள் அவர்கள்

லட்சுமிநரசு, கோமதி, அமரேந்திரராவ், முக்தா மற்றும் கிரண்மாய். நரசம்மாள் யாரிடம் இருந்து வழக்கு சொத்தை வாங்கினார்கள் என்றால் ராஜம்மாள் என்பரிடம் வாங்கினார்கள். ராஜம்மாள் யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்றால் செங்காரெட்டி. வாதிக்கும், செங்கரெட்டிக்கும் என்ன உறவு என்றால் செங்கரெட்டியின் மகன் ஆவார். ராஜம்மாள் எந்த ஊர் என்றால் தெரியாது. ராஜம்மாளுக்கும், செங்காரெட்டிக்கும் எந்த அடிப்படையில் வழக்கு சொத்து குறித்து பரிவர்த்தனை நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. செங்காரெட்டி, ராஜம்மாளிடம் இருந்து வழக்கு சொத்தை குறித்து அடமானக்கடன் பெற்றிருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. செங்காரெட்டி நான் ராஜம்மாளிடம் வாங்கிய கடனுக்காகத்தான் பெயர் அளவில் ஒரு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. ராஜம்மாளுக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்திருந்தாலும், அது பெயர் அளவில் எழுதி கொடுத்ததே தவிர வழக்கு சொத்து உண்மையில் செங்காரெட்டி மற்றும் தசரதராமரெட்டியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் நேரில் பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண்.249/2-ல் 3 ஏக்கர் 94 செண்ட் ஆகும். வழக்கு சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து விவசாயம் நிலம் என்றால் சரிதான். விவசாய நிலத்திற்கு வரப்பு உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்து பக்கத்தில் யார் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் போர் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் நீர்பாசன வசதி உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் விவசாயம் செய்தனரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது தற்போது விவசாயம் செய்து வருகிறார்கள். தண்ணீர் வசதி இல்லாமல் எப்படி விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் மழைகால்வாய் உள்ளது. அது வடக்கு தெற்காக உள்ளது. வழக்கு சொத்தின் நான்கு பக்கம் உள்ள சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் என்ன விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் நெல் பயிர் செய்து வருகிறார்கள். நெல் பயிர் செய்து விற்பனைக்கோ அல்லது நெல்பயிரை காப்பீடு செய்ததற்கோ ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. அதனை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். செங்கரெட்டி நரசம்மாளிடம் கடன் பெற்று ராஜம்மாளிடம் பெற்ற கடனை அடைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு மேற்படி கடனுக்கு பொறுப்பாகத்தான் வழக்கு சொத்து குறித்து நரசம்மாளிடம் இருந்து ராஜம்மாள் பெயருக்கு செங்கா ரெட்டி கிரைய

பத்திரம் எழுதி வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. நரசம்மாள் பெயரில் எழுதிய கிரைய பத்திரமும் பெயர் அளவில் எழுதிய கிரைய பத்திரம் என்றால் சரியல்ல. ராஜம்மாளின் பெயரில் கிரைய பத்திரம் எழுதப்பட்ட பிறகும் செங்காரெட்டி மற்றும் தசரதராமரெட்டி அனுபவித்து கொண்டு வந்தார்கள் என்றால் சரியல்ல. 1941 ல் நரசம்மாள் வாங்கியதில் இருந்து அவர் தான் அனுபவித்து வருகிறார். 1941–ல் இருந்து நரசம்மாள் தான் சுவாதீனத்தில் உள்ளார் என்பதை காண்பிக்க என்னிடம் ஏதேனும் வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். என்னுடைய பிறந்த தேதி 10.07.1975. என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 2008–ல் இறந்தார். நானும் என் தந்தையும் கொருக்குபேட்டையில் வசித்து வந்தோம்.

3. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஏ.சி.மெக்கானிக்காக உள்ளேன். வழக்கு சொத்து தசரதராமரெட்டி குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை வாதியின் பெயரில் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. தசரதராமரெட்டி நரசம்மாள் இறந்த பிறகு அவரிடம் வாங்கிய கடனை அவருடைய வாரிசான நாராயாணசாமி என்பவருக்கு திரும்ப செலுத்திவிட்டார் என்றால் தெரியாது. அவ்வாறு கடனை திருப்பி செலுத்திய பிறகு கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொடுப்பதாக கூறி இருந்தார்கள் நாராயணசாமிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அது தாமதமானது என்றால் சரியல்ல. 1981–ல் பட்டா எண்.737 தசரதராமரெட்டி பெயருக்கு வழக்கு சொத்து குறித்து பட்டா வழங்கபட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தசரதராமரெட்டி பெயருக்கு வழங்கப்பட்ட மேற்படி பட்டாவை ரத்து செய்யக்கோரி அப்போதைய சைதப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்தார் என்றால் சரிதான். மனுவின் பெயரில் மீண்டும் நரசம்மாள் பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது. பட்டா மாற்றம் செய்ததற்கான உத்தரவினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அது நகல் என்பதால் குறியீடு செய்யவில்லை. மேற்சொன்ன உத்தரவின் அசல் எங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது என் தந்தைக்கு தான் தெரியும். வருவாய் கோட்டாட்சியர் பட்டாவை ரத்து செய்து நரசம்மாள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று வழக்கிற்காக பொய் உறைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவில் என்ன உள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ.2 ஆவணத்தை புரியவில்லை என்று படிக்க மறுக்கிறார். சாட்சி பிறகு அதனை வா.சா.ஆ.2 ஆவணத்தை படித்து காட்டினார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பட்டாவை ரத்து செய்ய முடியாது என்றும் தசரதராமரெட்டி தொடர்ந்து அனுபவத்தில் இருந்து

வரும் காரணத்தினால் நீதிமன்றத்தை அனுக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ல் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை தசரதராமரெட்டியிடம் இருந்து சொத்தினை திரும்ப பெறுவதற்கு வழக்கு ஏதேனும் தாக்கல் செய்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.290/4 மற்றும் 307/1 உள்ள சொத்துக்களை தசரதராமரெட்டி வேறு நபர்களுக்கு விற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு சொத்துக்களும் 1941 ல் ஏற்பட்ட கிரையபத்திரத்தில் காண்பிக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு சொத்துக்களும் விற்பனை செய்துவிட்ட காரணத்தினால் அதை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு தசரதராமரெட்டி விற்பனை செய்தது செல்லாது என்று நான் வழக்கு தாக்கல் செய்ய உள்ளேன். தசரதராமரெட்டி எப்பொழுது விற்பனை செய்தார் என்றால் 2010 ல் தான் எனக்கு விற்பனை செய்தது தெரியவந்தது. மேற்சொன்ன இரண்டு சர்வே எண்களையும் வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்துக்களை விற்பனை செய்யாமல் 70 வருடங்களாக தசரதராமரெட்டி அனுபவித்து கொண்டு வந்ததால் அவருடைய உரிமை முழுமையாகிவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வே எண்.306/3 ல் அடங்கிய சொத்தினை குறித்து வேறு ஒரு நபருக்கு பொது அதிகார பத்திரம் வழங்கி இருந்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தினை வாதி அளக்கும் போது தான் 10ம் பிரதிவாதி என் தந்தையின் முகவர் என்ற முறையில் ஆட்சேபனை தெரிவித்தார் என்றால் எனக்கு தெரியாது. தசரதராமரெட்டி சர்வே எண்.306/3 க்கு மது என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் தெரியாது. 1987 ல் யு.டி.ஆரில் என் தந்தை பட்டா வாங்கினாரா என்றால் வாங்கினார். ஏற்கனவே மேற்படி கோட்டாட்சியர் உத்தரிவின் படி தசரதராமரெட்டி பெயரில் பட்டா இருந்தபோதும் அதனை மறைத்து என் தந்தை யு.டி.ஆர் பட்டா பெற்றார் என்றால் சரியல்ல பழைய பட்டா எண்.157 நரசம்மாள் பெயரில் தான் இருந்தது. யு.டி.ஆர் பட்டா எண்.96 ல் பட்டா வழங்கப்பட்டது அதனை ரத்து செய்து பட்டா எண்.157 வழங்கப்பட்டது. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களில் அந்த ஆவணம் இல்லை என்றால் இல்லை. யு.டி.ஆர் பட்டா ரத்து செய்து நரசம்மாள் பெயருக்கு மீண்டும் பட்டா வழங்கப்பட்டது என்று பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு தொடுப்பதற்கு முன்பு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். இவ்வழக்கில் தாக்கல் செய்தபோதே இருந்த நிலையிலேயே இருக்க வேண்டும் என்று வில்லங்கம் ஏதுவும் ஏற்படுத்தக்கூடாது என்றும் இடைக்கால மனு எண்.1422 / 2007 மனு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இடைக்கால தடை உத்தரவை மீறி சர்வே எண்.249/2 ல் உள்ள சொத்தினை 11ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது செல்லாது என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி சர்வே எண்.307/1 28.01.2008 ஏற்படுத்திய கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி 15.06.2007 ல் சர்வே எண்.306/3 சொத்துக்குறித்து நுட்டக்கி நாகேஸ்வரராவுக்கு எழுதிய கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன கிரைய பத்திரம் செல்லாது என்று வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் என் தந்தைக்கு தான் தெரியும். அந்த சமயத்தில் என் தந்தை உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் படுக்கையில் இருந்தார். வழக்கு சொத்து தொடர்ந்து தசரதராமரெட்டியின் சுவாதீனத்தில் இருந்து அவரின் வாரிசுகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல எங்களின் சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறார்கள். 11 மற்றும் 12 ம் பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திய மோசடியான கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தான் உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 11 ம் பிரதிவாதி வாதியுடன் சமரசம் செய்து கொண்டு அவர் வாங்கிய சொத்திற்கான தொகையை வாதிக்கு செலுத்திவிட்டு சுமுகமாக சென்றுவிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் 1ம் ஐட்ட சொத்து குறித்து வாதிக்கு முழு உரிமை உள்ளது என்றும் அவர் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு வழக்கு சொத்து குறித்து எதிரிடை அனுபவித்தின் மூலமாக வந்தது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 4.50 p.m.**